Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 161/2024**

**Deposition of PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜலட்சுமி | ஜாதி | : | |
| க/பெ | : | முரளி | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 29 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.05.2025.

(ஒன்றாவது எதிரி ஆஜர், 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. )

முதல் விசாரணை

நான் சின்னாளபட்டியில் குடியிருந்து வருகிறேன். 28.05.2024 அன்று இரவு 09.00 மணியை போல் நானும், எனது கணவரும், என் குழந்தைகளுடன் வீட்டிற்குள் இருந்தபோது, என் கணவர் என்னிடம் 10 பவுன் நகை கேட்டு என் தலை முடியை பிடித்து அடித்தார். சண்டை நடந்துகொண்டிருந்த போது, பக்கத்து வீட்டில் இருந்த எனது மாமனார் மணி, கொழுந்தனார் ராம்கி, கொழுந்தனார் மனைவி காஞ்சனாதேவி ஆகிய 3 பேரும் எங்கள் வீட்டிற்கு வந்து என் மாமனாரும், என் கொழுந்தனாரும் என் முகத்திலும், மூக்கிலும் கையால் அடித்தார்கள். காஞ்சனாதேவி அவரது காலால் எனது இடது பக்க தோளில் இரண்டு முறை மிதித்தார். என் மாமனாரும், கொழுந்தனாரும் தேவிடியா மகளே என்றும், புண்டா மகளே என்று ஆபாசமாக பேசி நகையை கொடுக்கவில்லை என்றால் உன்னை கொன்று விடுவோம் என்று என் மாமனாரும், கொழுந்தனாரும் என்னை மிரட்டினார்கள். என் கணவர் மூங்கு குச்சியை எடுத்து என் இடது பக்க தலையில் அடித்தார். அதனால் எனக்கு இடது பக்க தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. நான் வலி தாங்க முடியாமல் வீட்டிற்கு வெளியே ஓடி வந்து என் தம்பி பிரகாஷ்மணி என்பவருக்கு போன் செய்து நடந்ததை பற்றி சொன்னேன். சம்பவம் வீட்டிற்குள் தான் நடந்தது. அருகில் உள்ளவர்கள் யாரும் வீட்டிற்குள் வந்து சம்பவத்தை பார்க்கவும் இல்லை, தேக்கவும் இல்லை. என் அம்மாவும், தம்பியும் சண்டை நடந்தபிறகு நான் சொன்னதன் பேரில் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்துக்கொள்வதற்காக என்னை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு என் தம்பியும், என் அம்மாவும் அழைத்துச் சென்றார்கள். அங்கு 3, 4 நாங்கள் உள்நோயாளியாக இருந்து சிசிக்சை எடுத்துக்கொண்டேன். மருத்துவர்கள் எனக்கு தலையில் தையல் போட்டார்கள், மூக்கில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது என்று சொன்னார்கள். சின்னாளபட்டி போலீசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது வந்து விசாரித்தார்கள்.

என்னிடடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்துடன் கூடிய புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate,
Athoor.